Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 021 - பிப்ரவரி 27, 2022 முதல் மார்ச் 5 , 2022 வரை.**

## இருபத்தி ஒன்றாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

மறைமாவட்ட ஆயர் யாருடைய நலனில் அக்கறை கொண்டுள்ளார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 254)

[ ] தனது சொந்த மறைமாவட்ட நலனில் மட்டும்

[ ] அனைத்துலக திருச்சபை நலனில் மட்டும்

[ ] தனது சொந்த நலனில் மட்டும்

[ ] தனது சொந்த மறைமாவட்ட நலனிலும், அனைத்துலக திருச்சபையின் நலனிலும், தனிப்பட்ட திருச்சபையின் நலனிலும்

**கேள்வி 02**

"திருச்சபையின் ஆயர்களின் அருள்பணி" என்றும் விதித் தொகுப்பு எத்தனை இயல்களைக் கொண்டுள்ளது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 254)

[ ] ஒன்று

[ ] இரண்டு

[ ] மூன்று

[ ] நான்கு

**கேள்வி 03**

காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ற திருத்தூதுப் பணிமுறைகள், திட்டங்கள் வழியாகத் திருச்சபை மக்களுக்கு வழங்கும் மேலான நலன்களைப் பெருக்குவது யாருடைய நோக்கம்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 290)

[ ] ஆயர் பேரவை

[ ] அருட்பணிப் பேரவை

[ ] திருத்தூது கழகங்கள்

[ ] அருட்பணியாளர்கள்

**கேள்வி 04**

"திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்" எவ்வாறு அழைக்கப்படுகிறது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - அடிக்குறிப்பு பக். 9)

[ ] திருச்சங்கம்

[ ] இரண்டாம் வத்திகான் சங்கம்

[ ] திருச்சபை

[ ] கத்தோலிக்க சேவா சங்கம்

**கேள்வி 05**

மனிதரின் கூரறிவு தோற்றுவித்தவைகளில் மிக மேன்மையாக எண்ணப்படத் தகுந்தவை எவை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 55)

[ ] கவின் கலைகள்

[ ] இசைக் கலை

[ ] சமயக் கலை

[ ] நடனக் கலை

**கேள்வி 06**

அருட்பணியில் மறைமாவட்ட ஆயர்களுடன் ஒத்துழைப்பவர்கள் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 278)

[ ] அருட்பணியாளர்கள்

[ ] இணை ஆயர்களும், துணை ஆயர்களும்

[ ] அருட்பணியாளர்களும், திருத்தொண்டர்களும்

[ ] துறவிகள்

**கேள்வி 07**

பங்கு திருப்பணியாளர்கள் தம் துணையாளர்களுடன் சேர்ந்து ஆற்ற வேண்டிய பணிகள் யாவை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 282)

[ ] கற்பித்தல், தூய்மையாக்குதல், வழிநடத்துதல்

[ ] திருப்பலி நிறைவேற்றுதல், செபித்தல்

[ ] பங்கு சந்தித்தல்

[ ] மக்களை வழிநடத்துதல்

**கேள்வி 08**

கற்பிக்கும் பணியை ஆற்றும் போது கிறிஸ்தவ மக்கள் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு இவைகளில் வேரூன்றி கிறிஸ்துவில் வளர்வதற்கும் கிறிஸ்தவ சமூகம் ஆண்டவர் போற்றிய அன்பிற்குச் சாட்சியாக இருப்பதற்கும் இறைவார்த்தைகயைக் கிறிஸ்தவ மக்கள் யாவருக்கும் பறைசாற்றுவது யாருடைய கடமை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 283)

[ ] பங்கு திருப்பணியாளர்களின் கடமை

[ ] திருத்தந்தையின் கடமை

[ ] ஆயர்களின் கடமை

[ ] பொது நிலையினரின் கடமை

**கேள்வி 09**

பங்குப் பணியின் நோக்கம் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 284)

[ ] மக்களின் அருள்வாழ்வு நலன் பேணுவது

[ ] மக்களை சந்திப்பது

[ ] திருத்தூது கழகங்களை நடத்துவது

[ ] திருவழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பது

**கேள்வி 10**

இறைவேணடல் தன்னலமறுப்பு, தங்கள் வாழ்க்கையின் முன்மாதிரி ஆகிய செயல்களால் இந்நோக்கங்களை ஊக்குவிப்பது யாருடைய கடமை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 285)

[ ] அருட்பணியாளர்கள்

[ ] திருத்தொண்டர்கள்

[ ] துறவிகள்

[ ] அருட்சகோதரிகள்

**கேள்வி 11**

துறவிகளின் பண்புகள் யாவை? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 318)

[ ] கற்பு, ஏழ்மை, கீழ்படிதல்

[ ] இறைவேண்டல், தன்னலம் மறுத்தல்

[ ] கீழ்படிதல்

[ ] பிறரை அன்பு செய்தல்

**கேள்வி 12**

திருப்பணி பயிற்சி ஏட்டில் எத்தனை சி;றப்பு கூறுகள் முன்னிலைப் படுத்தப்படுகின்றன? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 323)

[ ] இரண்டு

[ ] மூன்று

[ ] நான்கு

[ ] ஐந்து

**கேள்வி 13**

திருப்பணி பயிற்சியகங்களின் முதன்மையான நோக்கம் எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 324)

[ ] மாணவரை அருட்பணியாளர்களாக உருவாக்குவது

[ ] பங்கு மக்களை சந்திப்பது

[ ] திருத்தூது கழகங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது

[ ] பயிற்சியகங்களை உருவாக்குவது

**கேள்வி 14**

இறையியலின் உயிர் நாடி எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 324)

[ ] செபம்

[ ] தியானம்

[ ] விவிலியம்

[ ] திருப்பலி

**கேள்வி 15**

கிறிஸ்தவ சமூகம் அனைத்தின் கடமை எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 328)

[ ] அழைத்தல்களைப் பேணி வளர்த்தல்

[ ] அருளடையாளங்களை பெறுதல்

[ ] திருவழிபாட்டில் பங்கெடுத்தல்

[ ] துறவிகளுக்கு மதிப்பளித்தல்

**கேள்வி 16**

"கிறிஸ்துவின் திருச்சபைக்கு அன்பு காட்டும் அளவிற்கு தான் ஒருவர் தூய ஆவியாரை பெற்றிருக்கிறார்"? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 336)

[ ] புனித எரோணிமுஸ்

[ ] புனித அம்புரோஸ்

[ ] புனித லாரன்ஸ்

[ ] புனித அகஸ்தீன்

**கேள்வி 17**

கல்வி பயிற்சிக்கான எல்லா வழிவகைகளுள்ளும் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 364)

[ ] குடும்பம்

[ ] கல்வி கூடம்

[ ] சமூகம்

[ ] பல்கலைகழகம்

**கேள்வி 18**

சமய உரையாடல் முயற்சிகளும் ஈடுபாடும் இந்தியத் திருச்சபில் எந்த இயக்கத்திற்கு வேகமளித்தள்ளன? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 381)

[ ] பண்பாட்டுமயமாக்கல்

[ ] கிறிஸ்தவ மறுமலர்ச்சி

[ ] பல்சமய உரையாடல்

[ ] சமூக உரையாடல்

**கேள்வி 19**

இறை நம்பிக்கை வாழ்வு என்பது ஓர் ______________ (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 381)

[ ] உறவு வாழ்வு

[ ] நம்பிக்கை வாழ்வு

[ ] அன்பின் வாழ்வு

[ ] அமைதி வாழ்வு

**கேள்வி 20**

சமய உரையாடலின் மைய நோக்கு எது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 382)

[ ] மானிட நேயம்

[ ] மானிட மேம்பாடு

[ ] மானிட நேயமும், மானிட மேம்பாடும்

[ ] மானிட உறவு

**கேள்வி 21**

இறை ஏவுதல் பெற்ற நூல்கள் யாவுமே எதற்காக எழுதப்பெற்றன? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 396)

[ ] மனித உறவுக்காக

[ ] மனித மீட்புக்காக

[ ] மனித மேம்பாட்டிற்காக

[ ] மனித அன்பிற்காக

**கேள்வி 22**

திருமறை நூல்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அவற்றிற்குப் பொருள் தருபவர் யார்? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 397)

[ ] இயேசு கிறிஸ்து

[ ] கடவுள்

[ ] தூய ஆவி

[ ] திருச்சபை இறையியலார்

**கேள்வி 23**

இறைவார்த்தை என்னும் கோட்பாட்டு விளக்கம் எத்தனை இயல்களைக் கொண்டது? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 395)

[ ] நான்கு

[ ] ஆறு

[ ] பத்து

[ ] இருபது

**கேள்வி 24**

இறைவார்த்தை என்னும் கோட்பாட்டு விளக்கத்தின் முதல் இயல் எதைப்பற்றி கூறுகிறது?
(இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 395)

[ ] இறைவெளிப்பாடு

[ ] இறைவெளிப்பாட்டிற்கான விளக்கம்

[ ] பழைய ஏற்பாடு

[ ] புதிய ஏற்பாடு

**கேள்வி 25**

மனித சமுதாயத்தின் தொடக்கமாகவும், அடித்தளமாகவும் அமைந்துள்ளது எது ? (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் - பக். 440)

[ ] குடும்பம்

[ ] சமூகம்

[ ] அருளடையாளங்கள்

[ ] திருமண வாழ்வு

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.